**Dated : 01.02.2025**

**O.S.No. 11/2023**

**DW.1 – திரு. ராமர்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 04.10.2022 தேதியன்று நான் தான் ஊத்தங்கரை தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தில் உதவி பொறியாளராக இருந்து வந்தேன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் உடைய கிணறு மற்றும் வீட்டிற்கு எங்கள் அலுவலகத்தின் மூலமாக மின் பாதை அமைத்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மின் பாதையானது மும்முனை மின் இணைப்பாகும். 5ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் செல்லும் மின்பாதை கிணற்றிற்கு மும்முனை மின்பாதையும், அதே மின்பாதையிலிருந்து 5ம் பிரதிவாதியின் வீட்டிற்கு இருமுனை மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெங்கடதாம்பட்டி மின்மாற்றி எண்.3 100 KVA–ல் இருந்து தான் 5ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மின்மாற்றியிலிருந்து 5ம் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லக்கூடிய மின்பாதையில் எத்தனை கம்பங்கள் நடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது.

பொதுவாக மின்தடை ஏற்பட்டால் அதை பராமரிப்பதற்கான பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறதா என்றால் ஆமாம். அந்த மின்பாதையில் மின் தடை ஏற்பட்டால் அது பொருத்து கொடுக்கப்படும் தகவலை நாங்கள் பராமரிக்கப்படும் ஆவணங்களில் பதிவு செய்யப்படுமா என்றால் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படுவதில்லை. அவ்வாறு மின்பாதையில் ஏற்படும் மின் பழுதை பொருத்து அதை பராமரிக்கப்படுவது சம்மந்தமான நடவடிக்கைகளில் 1ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகிறது. அந்த பதிவை 1ம் பிரதிவாதி தான் பதிவு செய்ய வேண்டும். அந்த பதிவேட்டில் எந்த தேதியில், எந்த நேரத்தில், எந்த இடத்தில் பழுது ஏற்பட்டுள்ளது விவரங்கள் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். மேலும் அந்த பழுதை எந்த தேதியில், எந்த நேரத்தில் பழுதை நிவர்த்தி செய்யப்பட்டது என்ற விவரத்தை அந்த பதிவேட்டில் சொல்லப்படும் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் இறந்து போன ஈஸ்வரிக்கு ஏற்பட்ட இறப்பு சம்மந்தமாக விசாரணை அதிகாரியிடம் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் மேற்படி ஆவணத்தின் பிரதியை விசாரணைக்காக கொடுத்தோமா என்றால் இல்லை,

எழுத்துப்பூர்வமாக தான் கொடுத்தோம். மேற்படி மின்பாதையில் ஏற்பட்ட சேதம் குறித்து நாங்கள் பதிவு செய்த விவரங்களை பொருத்து, நாங்கள் தாக்கல் செய்த பதிலுரையில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. அந்த ஆவணத்தின் பிரதியை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. அந்த மின்கம்பியானது எவ்வாறு அறுந்தது என்றால் 5ம் பிரதிவாதி தன்னுடைய நிலத்திற்கு டிராக்டர் மூலமாக இரவில் மண் எடுத்து சென்ற போது டிராக்டரை பின்பக்கமாக எடுத்த போது மோதி மேற்படி விபத்து ஏற்பட்டது. மேற்படி மின்பாதை செல்லும் மின்கம்பி மட்டும் அறுந்ததால் அதை மட்டும் நாங்கள் இணைத்துவிட்டோம்.

1ம் பிரதிவாதி ஆகிய நான் 5ம் பிரதிவாதியின் கவனக்குறைவால் மேற்படி மின்படி சேதம் அடைந்தது பொருத்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் பேரில் 5ம் பிரதிவாதி பெயரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நாங்கள், 5ம் பிரதிவாதி பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சம்பவம் நடந்த தேதியாக சொல்லும் 04.10.2022 தேதியில் எங்களுடைய பராமரிப்பின் குறைபாட்டில் தான் மேற்படி மின்கம்பி அறுந்து விழுந்தது என்றால் சரியல்ல. எங்களுடைய அலுவலகத்தின் பராமரிப்பு குறைபாட்டினால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றும், அதற்காக வாதிக்கு கொடுக்க வேண்டிய இழப்பீடு தொகையை கொடுக்காமல் தவிர்ப்பதற்காக தான் 5ம் பிரதிவாதி பெயரில் நாங்கள் மேற்படி விபத்திற்கு 5ம் பிரதிவாதி காரணம் என்று தவறாக கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

எங்கள் அலுவலகத்தை சார்ந்த கனகராஜ் கம்பியாளர் மேற்படி மின்சாரம் விபத்து ஏற்பட்டவுடன் அவர் மின்சார இணைப்பை துண்டித்தார் என்று சொல்வது தவறு என்றும், அவ்வாறு அவர் எந்த பணியிலும் ஈடுபடவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. மேற்படி இறந்து போன ஈஸ்வரியானவர் நாங்கள் போட்ட அந்த மின்பாதையில் உள்ள மின்கம்பி அறுந்ததால் தான் இறந்தார் என்றால் சரியல்ல. மேற்படி இறந்து போன ஈஸ்வரியானவர் விவசாய வேலைகள் செய்தும், ஆடு, மாடுகளை மேய்த்தும் வருமானம் ஈட்டிவந்தார் என்றும், எங்களுடைய கவனக்குறைவால் மேற்படி விபத்து ஏற்பட்டு அவர் இறந்துவிட்டதால், அவர் இறப்பிற்கான இழப்பீடு தொகையை நாங்கள் தான் கொடுக்க வேண்டும் என்றும், அதனால் வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியின் கவனக்குறைவால் மேற்படி விபத்து நடந்ததாக நான் சொல்வது

தவறு என்றால் சரியல்ல. ஈஸ்வரி இறந்ததற்குண்டான இழப்பீடு தொகையை நாங்கள் தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியின் கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- XXX,
Principal District Judge,
Krishnagiri.